பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

25 12 2024 **WEDNESDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பீகார், ஒடிஷா உள்ளிட்ட ஐந்து மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2. வாஜ்பாயின் வாழ்க்கை மற்றும் கொள்கைகள் அனைவருக்கும் இன்றளவும் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. நாடு முழுவதும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பன்னோக்கு கூட்டுறவு சங்கங்களை அத்துறைக்கான அமைச்சர் திரு அமித் ஷா இன்று காணொளி மூலம் தொடங்கிவைக்கிறார்.

4. தமிழகத்தின் பாம்பன் ரயில்வே பாலம் விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று மத்திய இணையமைச்சர் திரு பூபதி ராஜு சீனிவாச வர்மா தெரிவித்துள்ளார்.

5. ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Parv Chaudhary** இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**<<<<<>>>>>**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ஐந்து மாநிலங்களுக்கான ஆளுநர்களை நியமித்துள்ளார்.

மிசோரம் ஆளுநராக உள்ள டாக்டர் ஹரிபாபு **'Kambhampati '** ஒடிஷா மாநில புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இம்மாநிலத்தில் ஆளுநராக இருந்த திரு ரகுபர் தாஸ் ராஜினாமா செய்தார்.

முன்னாள் மத்திய அமைச்சர் ஜெனரல் வி கே சிங், மிசோரம் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பீகார் ஆளுநராக உள்ள திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர், கேரளா ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்மாநிலத்தின் ஆளுநராக உள்ள திரு ஆரிஃப் முகமது கான், பீகார் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் உள்துறை செயலாளர் திரு அஜய்குமார் பல்லா, மணிப்பூர் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<<>>>>>

முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் நூற்றாண்டு பிறந்த தினத்தையொட்டி, மத்தியப்பிரதேச மாநிலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைக்கிறார்.

கஜூராகோ என்ற இடத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில், நாட்டின் முதலாவது நதிகள் இணைப்பு திட்டமான **Ken – Betwa** இணைப்பு தேசிய திட்டத்துக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

இதன்மூலம் மத்தியப்பிரதேசம் மற்றும் உத்தரப்பிரதேச மாநிலத்தில் லட்சக்கணக்கான விவசாய குடும்பங்கள் பயன்பெறுவதுடன், பல்வேறு மாவட்டங்களில் விவசாய பணிகளும் அதிகரிக்கும்.

இதுதவிர, அந்த பகுதியில் குடிநீர் தேவைகளும் நிறைவேற்றப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நிகழ்ச்சியில், வாஜ்பாயின் நூற்றாண்டு பிறந்த தினத்தை குறிக்கும் வகையில், நினைவு தபால் தலை மற்றும் நாணயத்தை திரு நரேந்திர மோடி வெளியிடுகிறார்.

கிராமப்புறங்களில் நல்லாட்சியை வழங்கும் வகையில், ஆயிரத்து 153 பஞ்சாயத்து புதிய கட்டிடங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

<<<<<>>>>>

முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் வாழ்க்கை மற்றும் கொள்கைகள் அனைவருக்கும் இன்றளவும் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

பாரத ரத்னா வாஜ்பாயின் நூற்றாண்டு பிறந்த தின கொண்டாட்டங்களையொட்டி, லக்னோவில் நேற்று அடல் இளையோர் மகா கும்பமேளா, அடல் சுகாதார கண்காட்சியை உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத்துடன் இணைந்து திரு ராஜ்நாத் சிங் தொடங்கிவைத்தார்.

அப்போது பேசிய திரு ராஜ்நாத் சிங், வாஜ்பாயின் தனித்த ஆளுமை இன்றளவும் அனைவராலும் நினைவுகூரப்படுவதாக கூறினார்.

வாஜ்பாய் அமைச்சரவையில் தாம் பணியாற்றியதன் பல்வேறு நினைவுகளையும் அவர் எடுத்துரைத்தார்.

முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், நாட்டு மக்கள் மீது வாஜ்பாய் கொண்டிருந்த அன்பையும், ஈர்ப்பையும் வெளிப்படுத்தும் வகையில், அவருடைய நினைவாக இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

நாடு முழுவதும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பன்னோக்கு கூட்டுறவு சங்கங்களை அத்துறைக்கான அமைச்சர் திரு அமித் ஷா இன்று காணொளி மூலம் தொடங்கிவைக்கிறார்.

புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள், பால் மற்றும் மீன்வள கூட்டுறவு சங்கங்களை அவர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

அந்த சங்கங்களுக்கு பதிவு சான்றிதழ்கள், ரூபே விவசாயிகள் கடன் அட்டைகளையும் நிகழ்ச்சியில் அமைச்சர் வழங்கவுள்ளார்.

இந்த கூட்டுறவு சங்கங்கள் பஞ்சாயத்துகள் அளவில் கடன் சேவைகளை எளிதாக பெறுவதற்கும் நிதி தொடர்பான உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கும் வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் கிராமப்புற மக்களும் பங்கேற்கும் வகையில் இந்த கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தின் பாம்பன் ரயில்வே பாலம் விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று மத்திய இணையமைச்சர் திரு பூபதி ராஜு சீனிவாச வர்மா தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், இந்த பாலத்தை விரைவில் ரயில்வே அமைச்சர் பார்வையிட்ட பின்னர் அடுத்த மாதம் பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்துவைப்பார் என்றும் அவர் கூறினார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஜல் ஜீவன் திட்டம், வேளாண்மை, கூட்டுறவு, மருத்துவம், கல்வி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்பட்டுவரும் பணிகளை தாம் ஆய்வு செய்ததாக அவர் கூறினார்.

நாடு முழுவதும் வளர்ச்சிக்கான முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தவுள்ள 112 மாவட்டங்களில் ராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு பூபதி ராஜு சீனிவாச வர்மா தெரிவித்தார்.

<<<<<>>>>>

இயேசு பிரான் அவதரித்த கிறிஸ்துமஸ் பண்டிகை இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இயேசு கிறிஸ்துவின் அன்பு மற்றும் சமாதானம் மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

சகோதரத்துவம் மற்றும் அனைவரின் நலன்களையும் கருத்தில்கொள்ளும் அவரின் பண்பு அனைவருக்கும் வழிகாட்டுதலாக இருக்கும் என்றும் திருமதி திரௌபதி முர்மு குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், உலகளாவிய நம்பிக்கை, இரக்க மனப்பான்மை, ஒற்றுமை போன்ற கிறிஸ்துவின் போதனைகள் தற்போதைய காலத்திற்கும் ஏற்றதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அன்பின் பாதையை நெறிதவறாமல் பின்பற்றும் கிறிஸ்தவ மக்கள் அனைவருக்கும் உளம் கனிந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாக தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தமது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களையொட்டி, நாடு முழுவதும் அனைத்து நகரங்களிலும் உள்ள தேவாலயங்கள் அலங்கரிக்கப்பட்டு வண்ண விளக்குகளால் ஜொலிக்கின்றன.

நள்ளிரவில் நடைபெற்ற சிறப்பு பிரார்த்தனைகளில் ஏராளமான கிறிஸ்தவர்கள் கலந்துகொண்டனர்.

வாட்டிகன் நகரில் போப் ஆண்டவர் பிரான்சிஸ் புத்தாண்டை வரவேற்கும் விதமாக நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பு பிரார்த்தனை நடத்தினார்.

தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலும் கிறிஸ்துமஸ் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

சென்னை சாந்தோம் தேவாலயம், பெசன்ட் நகர் வேளாணாங்கண்ணி மாதா ஆலயம், எழும்பூர், பாரிமுனை உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் உள்ள தேவாலயங்களில் சிறப்பு திருப்பலிகள் நடைபெற்றன.

<<<<<>>>>>

ஆட்சி நிர்வாகத்தை எளிமைப்படுத்த ஏதுவாக, பயன்பாட்டில் இல்லாத சட்டங்கள் திரும்பப்பெறப்பட்டிருப்பதாக மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நல்லாட்சி தினத்தையொட்டி, நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்களை அவர் பட்டியலிட்டார்.

வெளிப்படைத்தன்மை, புதுமை கண்டுபிடிப்புகள் மக்களை மையப்படுத்தும் வகையிலான கொள்கைகள் ஆகியவற்றுக்கு அரசு உறுதிபூண்டிருப்பதாக அவர் கூறினார்.

இதன்மூலம், நாட்டில் ஆட்சி நிர்வாகம் மறு சீரமைக்கப்பட்டிருப்பதாக டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<>>>>>

பிஎஸ்எல்வி சி-60 ராக்கெட் மூலம், இரண்டு சிறிய ரக செயற்கைக்கோள்களை இஸ்ரோ வரும் 30-ஆம் தேதி விண்ணில் செலுத்தவுள்ளது.

அன்றைய தினம் ஸ்ரீஹரிகோட்டாவின் முதலாவது ஏவுதளத்தில் இருந்து இரவு மணி 9.58-க்கு இந்த செயற்கைக்கோள்கள் ஏவப்படும் என்றும், 470 கிலோமீட்டர் தொலைவிலான விண்வட்ட சுற்றுப்பாதையில் அவை நிலைநிறுத்தப்படும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

**Spadex** என பெயரிடப்பட்டுள்ள இந்த செயற்கைக்கோள் திட்டம் மிக குறைந்த செலவிலானது என்றும் நிலவிற்கு மனிதனை அனுப்புக்கூடிய இந்தியாவின் முயற்சிக்கு அத்தியாவசிய தொழில்நுட்பத்தை உருவாக்கக்கூடிய வகையில் அமையும் என்றும் இஸ்ரோ அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<<>>>>>

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான 26 பேர் கொண்ட இரண்டாவது வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ளது.

காங்கிரஸ் இரண்டாவது பட்டியலில் சாஹூர் பஸ்தி தொகுதியில் சத்தீஷ் லுத்ராவும், ராஜோரி கார்டன் தொகுதியில் தரம்பால் சந்தேலாவும், வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டிருப்பதாக காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Parv Chaudhary** இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளார்.

தோஹாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், 96 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கங்களை கைப்பற்றினார்.

------------

வெஸ்ட் இன்டீஸுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 115 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

வதோதராவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில், 5 விக்கெட் இழப்பிற்கு 358 ரன் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய வெஸ்ட் இன்டீஸ் அணி, 46 புள்ளி இரண்டு ஓவரில், 243 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்த வெற்றியைத் தொடர்ந்து மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரை 2-0 என்ற கணக்கில் இந்தியா வென்றுள்ளது.

மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நாளை மறுநாள் வதோதராவில் நடைபெறுகிறது.

<<<<<END>>>>>